**கடுகன்னாவ நகர சபை**
**கண்டி மாவட்டம்**

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

2018 ஆண்டின் நிதிக்கூற்றுக்கள் 2019 மார்ச் 29 திகதி கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் அந் நிதிக்கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வாளரின் பொழிப்பு அறிக்கை மற்றும் விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2019 மே 31 ஆம் திகதியும் தவிசாளரிற்கு அனுப்பப்பட்டது.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை பிரிவில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கங்களைத் தவிர்த்து நிதிக்கூற்றுகளின் 2018 திசெம்பர் 31 இல் கடுகன்னாவ நகர சபையின் நிதி நிலைமையினையும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

**(அ) கணக்கீட்டுக் குறைபாடுகள்**

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (i) | ரூபா 67,500 ஆன விளம்பர பலகை வருமானம் நிதிக் கூற்றுக்களிலிருந்து கைவிடப்படடிருந்தது. | சரியாக கணக்கீட செய்ய வேண்டும் | 2019 ஆண்டின் போது அறவிட நடவடிக்கை எடுக்கிறேன். |
| (ii) | கடன் கொடுத்தோர் ரூபா 1,152,033 கூடுதலாக காட்டப்பட்டிருந்தது. | சரியாக கணக்கீட செய்ய வேண்டும் | 2019 ஆண்டின் போது சரி செய்ய நடவடிக்கை எடுக்கிறேன். |
| (iii) | நூலக புத்தகங்கள் மீதி ரூபா 258,139 குறைத்து காட்டபபட்டிருந்தது. | சரியாக கணக்கீட செய்ய வேண்டும் | 2019 ஆண்டின் போது சரி செய்ய நடவடிக்கை எடுக்கிறேன். |
| (iv) | மீளாய்வாண்டு இறுதியில் கணிப்பாய்வின் போது அகற்றப்பட்ட ரூபா 175,000 பெறுமதியான 10 கொம்போஸ்ட் பெரல்கள் மற்றும் செலவிற்கு பதிவழிக்க வேண்டிய ரூபா 17,737 பெறுமதியான மலசலகூட தொகுதியொன்று கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | சரியாக கணக்கீட செய்ய வேண்டும் | 2019 ஆண்டின் போது சரி செய்ய நடவடிக்கை எடுக்கிறேன். |

(ஆ) **பெற வேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்**

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (i) | 03 ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலமொன்று விஞ்சியிருந்த ரூபா 827,599 ஆன பெற வேண்டிய மீதியொன்று ஆனது. | பெற வேண்டிய மீதியை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும் | நடமாடும் சேவை நடாத்தி, வழக்கு தாக்கல் செய்து சட்ட நடவடிக்கை எடுத்து, குறித்த நிறுவனங்களை அறிவூட்டி அறவிடுவதாக அறிவிக்கிறேன். |
| (ii) | 03 ஆண்டுகளுக்கு மேற்பட்ட ரூபா 1,181,166 ஆன செலுத்த வேண்டிய மீதியொன்றும் தீர்க்கப்பட்டிருக்கவில்லை. | செலுத்த வேண்டிய மீதிகளை தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும் | சில மீதிகள் செலுத்தப்பட்டுள்ளன. சபையின் நிதி நிலைமைக் கேட்ப பகுதியாக செலுத்தப்படும். |

## 1.4 இணங்காமை

### 1.4.1 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமை தீர்மானங்களுடன் இணங்காமை

| | சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமை தீர்மானங்களுடனான தொடர்பு | இணங்காமை | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|---|
| (அ) | இலங்கை சனநாயக சோஷலிசக் குடியரசின் நிதிப்பிரமாணம் 571 | ரூபா 774,531 ஆன வைப்பு மீதியொன்றை தீர்ப்பதற்கு நடவடிக்கை எடத்திருக்கவில்லை. | நிதிப்பிரமாணம் பிரகாரம் செயற்பட வேண்டும். | வைப்பு பதிவேடுகளை பரிசீலித்து எதிர்காலத்தில் குறித்த பெறுமானங்களை வருமானத்திற்க எடுக்க நடவடிக்கை எடுக்கிறேன். |
| (ஆ) | 2012 திசெம்பர் 15 திகதிய இலக்கம் 1892 கொண்ட இலங்கை சனநாயக சோஷலிசக் குடியரசின் வர்த்தமானி | 11 விளம்பர பலகைகளிலிருந்து ரூபா 553,000 ஆன தொகையொன்று அறவிடப்பட்டிருக்கவில்லை. | வருடம் ஆரம்பத்தில் ஒழுங்கான கணிப்பாய்வொன்று செய்து கட்டணம் அறவிட வேண்டும். | சில விளம்பர பலகைகளிலிருந்து கட்டணம் செலுத்தப்பட்டிருந்ததுடன், சில விளம்பர பலகைகள் வெட்டி அகற்றப்பட்டுள்ளது. |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், 2018 திசெம்பர் 31 திகதியில் முடிவடைந்த ஆண்டுக்கான சபையின் மீண்டுவரும் செலவுகளை விஞ்சிய வருமானம் ரூபா 2,175,888 ஆனதுடன், அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவுகளை விஞ்சிய வருமானம் ரூபா 5,871,783 ஆனது.

### 2.2 வருமான நிருவாகம்

#### 2.2.1 மதிப்பிடப்பட்ட வருமானம், பில் இடப்பட்ட வருமானம், சேர்க்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆணடு தொடர்பாக முன்வைக்கப்பட்ட மதிப்பிடப்பட்ட வருமானம், பில் இடப்பட்ட வருமானம், சேர்க்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் பின்வருமாறு.

| | | 2018 | | | | 2017 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | வருமான மூலம் | மதிப்பிடப்பட்ட வருமானம் | பில் போடப்பட்ட வருமானம் | சேர்க்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் மொத்த நிலுவை | மதிப்பிடப்பட்ட வருமானம | பில் போடப்பட்ட வருமானம | சேர்க்கப்பட்ட வருமானம | திசெம்பர் 31 இல் மொத்த நிலுவை |
| | | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| (i) | வீத வரி மற்றும் குத்தகை | 7,650,000 | 7,655,135 | 8,171,375 | 5,357,337 | 7,500,000 | 7,635,212 | 7,349,477 | 5,873,578 |
| (ii) | வாடகை | 3,032,300 | 2,114,985 | 1,952,635 | 674,918 | 3,309,000 | 4,175,392 | 3,927,442 | 765,395 |
| (iii) | அனுமதிப்பத்திரக் கட்டணம் | 1,300,000 | 1,314,386 | 1,314,386 | - | 1,150,000 | 1,426,954 | 1,399,954 | 27,000 |
| (iv) | ஏனைய வருமானம் | 2,585,000 | 2,798,655 | 2,232,409 | 1,015,961 | 2,826,000 | 911,428 | 1,914,595 | 736,238 |
| | | 14,567,300 | 13,883,161 | 13,670,805 | 7,048,216 | 14,785,000 | 14,148,986 | 14,591,468 | 7,402,211 |

#### 2.2.2 வருமானம் சேகரித்தளின் செயலாற்றுகை

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டினுள் சேர்க்கப்பட வேண்டிய மொத்த வருமானம் ரூபா 21,285,372 ஆன போதும், ஆண்டினுள் சேர்க்கப்பட்ட வருமானம் ரூபா 13,670,805 ஆனமையால் வரமானம் சேகரிப்பதன் முன்னேற்றம் 64 சதவீதமானது. | நிலுவை வருமானம் அறவிடப்பட வேண்டும். | ஏற்றுக் கொள்கிறேன். |

#### 2.2.3 வீத வரி மற்றும் குத்தகை

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டு இறுதிக்கு வீத வரி நிலுவை மீதி ரூபா | நிலுவை வருமானம் | நிலுவை வீத வரி அறவிடலை அதிகரித்துக் கொண்டுள்ளதாக |

| | | |
|---|---|---|
| 5,357,337 ஆனதுடன், அவற்றினுள் 10 அரச நிறுவனங்களிடமிருந்து ரூபா 937,152 ஆன மீதியொன்று அறவிட வேண்டியதாக இருந்தது. | அறவிடப்பட வேண்டும். | அறிவிக்கிறேன். |

**2.2.4 கடை வாடகை**

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | 21 கடைகளிலிருந்து நீண்ட காலமாக நிலவி வரம் ரூபா 573,918 ஆன நிலவை மீதியொன்று ஆனது. | நிலுவை கடை வாடகை அறவிட நடவடிக்கை எடுக்க வேண்டும். | ஏற்றுக் கொள்கிறேன். |
| (ஆ) | 2008 ஆண்டு முதல் நிலவி வரும் ரூபா 252,826 ஆன வாராந்த சந்தை வருமானமொன்று அறவிட வேண்டியதாக நிலவியது. | நிலுவை வருமானத்தை அறவிட நடவடிக்கை எடக்க வேண்டும். | ஏற்றுக் கொள்கிறேன். |

**2.2.5 நீதிமன்ற தண்டப˚பணம் மற்றும் முத்திரைக் கட்டணம்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| நீதிமன்ற தண்டப்பணத்திற்காக ரூபா 211,332 மற்றும் முத்திரைக் கட்டணம் ரூபா 6,739,600 பெறவேண்டியதாக இருந்தது. | குறித்த பணத்தை சபைக்கு அழைப்பித்துக் கொள்ள நடவடிக்கை எடுக்க வேண்டும். | ஏற்றுக் கொள்கிறேன். |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயலாற்றுகை

நகர சபை கட்டளைச் சட்டத்தின் 04 பந்தியின் கீழ் பொது மக்கள் சுகாதாரம், பொதுப் பயன்பாட்டு சேவைகள் மற்றும் பொதுப் பாதைகள் தொடர்பான விடயங்களை ஒழுங்குபடுத்தலும் கட்டுப்படுத்தலும், மக்கள் நலன், இலகு மற்றும் நலன்புரிச் சேவைகள் போன்ற சபையினால் மேற்கொள்ள வேண்டிய செயற்பாடுகளை நிறைவேற்றுவது தொடர்பாக வெளிப்படுத்தப்பட்ட விடயங்கள் பின்வருமாறு.

**(அ) துணைச் சட்டம்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| நகர சபை கட்டளை சட்டத்தின் 157 பிரிவின் கீழ் | துணைச் சட்டம் விதித்து வருமானம் ஈட்டுவதத்தை | ஏற்றுக் கொள்கிறேன் |

| | | |
|---|---|---|
| 15 பிரதான விடயங்களை செய்வதற்காக துணைச் சட்டம் விதிக்கபட வேண்டிய போதும் 14 விடயங்களிற்கு மாத்திரம் துணைச்சட்டம் விதிக்கப்பட்டிருந்தது. | செய்ய வேண்டும். | |

**(ஆ) கைவிடப்பட்ட வேலைகள்**

| **கணக்காய்வு அவதானிப்புக்கள்** | **பரிந்துரை** | **கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை** |
|---|---|---|
| அபிவிருத்தி திட்டத்தின் பிரகாரம் மேற் கொள்வதற்கு ஒதுக்கப்பட்ட ரூபா 14,600,000 பெறுமதியான 25 வேலைகள் மேற் கெள்ளப்பட்டிருக்கவில்லை | அபிவிருத்தி திட்டத்தினை மேற் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | அவசர அனர்தம் அத்தியவசிய பராமரிப்பு செய்வதற்காக உத்தேசங்கள் கிடைத்தவுடனே அவற்றை கட்டாயமாக செய்ய வேண்டும். அதன் போது இக கருத்திட்டங்களை நடைமுறைப்படுத்தும் இயலுமை இல்லை. |

**(இ) சுற்றாடல் பிரச்சினை**

| **கணக்காய்வு அவதானிப்புக்கள்** | **பரிந்துரை** | **கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை** |
|---|---|---|
| உக்கலடையாத கழிவுப் பொருட்கள் சபைக்கு சொந்தமான நிலமொன்றில் சுற்றாடளுக்கு மாசு ஏற்படும் விதத்தில் வெளியிடப்பட்டிருந்தது. | சுற்றாடளுக்கு மற்றும் பொது மக்களுக்கு பாதிப்பேட்படாத விதத்தில் குப்பைகளை பெளியிட நடவடிக்கை எடுக்க வேண்டும். | ஏற்றுக் கொள்கிறேன் |

**(ஈ) நிலைபேறான அபிவிருத்தி இலக்குகள்**

| **கணக்காய்வு அவதானிப்புக்கள்** | **பரிந்துரை** | **கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை** |
|---|---|---|
| சபையினால் நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்கள் இலக்குகளை இனங்கண்டு அவற்றை அடைந்து கொள்ள மற்றும் முன்னேற்றத்தை அளவிடுவதற்கான அளவுகோள்களை இனங்கண்டிக்கவில்லை. | நிலைபேறான அபிவிருத்தி இலக்குகளை இனங்கண்டு அவற்றை அடைந்து கொள்ள நடவடிக்கை எடுக்க வேண்டும். | ஏற்றுக் கொள்கிறேன் |

**3.2 முகாமைத்துவ வினைத்திறமையின்மை**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| சபைக்கு சொந்தமான சிறப்பங்காடி தொகுதியல் 12 ஆம் இலக்க கடையறையை 2011 ஆண்டு முதல் டெண்டர் மூலம் வழங்கப்படாமையினால் ரூபா 1,290,000 ஆன வருமானமொன்று இழக்கப்பட்டிருந்தது. சபையின் 02 பொது மலசல கூடங்கள் ரூபா 825,000 யிற்க டெண்டர் செய்திருந்த போதும், குத்தகைக்கு வழங்க முடியாமலிருந்தது. | சபைக்கு சொந்தமான கடையறைகள் ஒழுங்காக மதிப்பிட்டு டெண்டர் செய்து குத்தகைக்கு வழங்குவதற்கு நடவடிக்கை எடக்க வேண்டும் | பதில் வழங்கப்படவில்லை. |

**3.3 மனித வள முகாமைத்துவம்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| சபையின் அங்கீகரிக்கப்பட்ட ஆளணியில் 04 பதவிகளில் 09 வெற்றிடங்கள் நிலவியது. | வெற்றிடங்கள் நிரப்பிக்கொள்ள நடவடிக்கை எடுக்க வெண்டும். | பதில் வழங்கப்படவில்லை. |

3.4 **செயற்பாட்டு வினைத்திறமையின்மை**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 2012 ஆண்டின் போது வீத வரி மதிப்பீடு செய்யததன் பின் மீண்டும் மதிப்பீடு செய்திருக்கவில்லை. | 05 வருடங்களுக்கு ஒரு முறை வீத வரி பெறுமதி மதிப்பீடொன்று மேற்கொள்ளப்பட்டு வரி அறவிட நடவடிக்கை எடுக்க வேண்டும். | மதிப்பீட்டு திணைக்களத்தை அறிவூட்டியுள்ள போதும், மேற் கொள்ளப்பட்டிருக்கவில்லை. |

**3.5 சொத்துக்கள் முகாமை**

**3.5.1 சொத்துக்களின் பாதுகாப்பபை உறுதிப்படுத்தப்படாமை**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| சபைக்கு சொந்தமான காணிகளின் எல்லைகளை இனங்கண்டு பாதுகாக்க நடவடிக்கை எடுக்காமையினால் அனமதியற்ற கைப்பற்றல் மற்றும் வசித்தலிற்காக இடமளிக்கப்பட்டிருந்தது. | சபைக்கு சொந்தமான சொத்துக்களை பாதுகாக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். | பதில் கிடைத்திருக்கவில்லை. |

**3.5.2 விளைவற்ற மற்றும் குறை பயன்பாட்டு சொத்துக்கள்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| ரூபா 1,400,000 பெறுமதியான மோட்டர் வண்டி மற்றும் ரூபா 7,967,144 பெறுமதியான வயிப்ரேடிங் ரோல் பயன்படுத்தாது நிறுத்தி வைக்கப்பட்டிருந்தன. | பழுதுபார்த்து பயன்படுத்தவோ அல்லது பராதீனத்திற்காக நடவடிக்கை எடுக்க வேண்டும். | சபைக்கு சொந்தமான 302-1522 இலக்க கொண்ட மோட்டார் வண்டியை ஏலவிற்பனை செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படுவதுடன் வயிப்ரேடிங் ரோல் தேவையான சந்தர்ப்பங்களில் மாத்திரம் பயன்படுத்தப்படுகிறது என வினையமாக அறிவிக்கிறேன். |